[19th July 1957

(c) if so, the action taken by the Government on the above application?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) The matter is under consideration of the Government in consultation with the Government of India.

SRI R. KRISHNASWAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கம்பெனிக்கு பிப்ரவரி மாதத்திலேயே பாக்டரி அமைக்க லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது. மைனிங் லைசென்சு வழங்கப்படுவதில் ஏற்பட்ட கஷ்டம் என்ன ? ஆறுமாதத்திற்குள் பூர்வாங்க வேலைகள் தொடங்கவேண்டும் என்றும் 18 மாதங்களுக்குள் கன ரக இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுக்க வேண்டுமென்றும் லைசென்ஸ் கொடுக்கும்பொழுது சில வரையறைகள் குறிக்கப்பட்டது. முக்கியமாக இப்போது மைனிங் லைசென்சு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தச் சுரங்கக் குத்தகை விஷயமாக மெட்ராஸ் சிமெண்டு கம்பெனிக்கும், இந்தியா சிமெண்டு கம்பெனிக்கும் ஓரளவு மனத்தாங்கல் இருக்கிறது. இந்தியா சிமெண்டுக் கம்பெனியார் அந்தக் குத்தகையை தங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மெட்ராஸ் கம்பெனியாரும் தங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்பதால் யாருக்குக் கொடுப்பது என்பது பிரச்னையில் இருக்கிறது. அதுதான் தாமதம்.

SRI S. B. ADITYAN : இந்த மெட்ராஸ் கம்பெனியார் சிமெண்டு தொழில் சாலையை ஆரம்பிப்பதற்கு சர்க்காரே 10 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கோரியிருப்பதாகக் தெரிகிறது. அப்படிக் கொடுக்கும் போது இதனால் ஏற்படும் விளைவு என்ன என்பதை யோசித்துப் பார்த்து ஏற்கனவே சுதர்சனம் ஆயில் மில்லுக்குக் கொடுத்தபோது ஏற்பட்ட நிலைமை ஏற்படாது இருக்கவேண்டும் என்பதை மனதில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: சிமிண்டு தொழிற்சாலையை ராமநாதபுரம் ஜில்லாவில் ஆரம்பிக்கவேண்டுமென்ற காரணத்திற்காக மெட்ராஸ் சிமெண்டுக் கம்பெனியார் சென்னை சர்க்கார் பத்து லட்சத்திற்கு அதிகமாக இல்லாமல் அதில் ஓரளவு பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டிருக்கிறார்கள். சர்க்கார் தொழில் துறையில் ஈடுபடவேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டுவிட்டால் அதில் லாப நஷ்டம் வந்தாலும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டி நேரிடும்.

SRI R. KRISHNASWAMI NAIDU : அந்த மைனிங் லீஸ் கொடுக்கும் அதிகாரம் பூர்ணமாக மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறதா ? அல்லது மாகாண சர்க்காரிடமே இருக்கிறதா ? ஆனால் இந்த மைனிங் லீஸ் வேண்டுமென்று கேட்பதற்கு முதலில் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு மத்திய சர்க்காரின் லைசென்சு பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்பதாக முதல் தகுதி குறிக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : மைன்ஸ் லீஸ் விதிகள் பிரகாரம் இரண்டு பேர்கள் ஒரு இடத்திலே குத்தகை வேண்டுமென்று கேட்டால் முதலில் யார் கேட்டார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். ஆனால் தகுந்த காரணத்திற்காக மாகாண சர்க்கார் வேறு யாருக்காவது கொடுக்கலாம் என்று அதிகாரம் இருக்கிறது. அந்த முறையில் மெட்ராஸ் சிமெண்டு கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது.

19th July 1957]

Sri K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் தொழில் துறையில் அரசாங்கம் பங்குகொள்வது என்று தீர்மானித்துவிட்டால் அதில் வரும் லாப நஷ்டத்திற்கும் உள்ளாகத்தான் நேரும் என்று சொன்னார்கள். பிறருடைய தனியார் தொழிலில் பங்கு எடுத்துக்கொண்டு இந்த நிலைமைக்கு உள்ளாவதைவிட தனிப்பட்ட முறையிலேயே அரசாங்கம் அத்தொழில்களை நடத்துவது நல்லதல்லவா ? லாப நஷ்டம் ஏற்படுமானாலும் கூட முதலுக்கே மோசம் வராமல் இருக்கவாவது அரசாங்கம் கவனித்துக் கொள்ள முடியாதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : எந்தத் தொழிலிலாவது நஷ்டம்வரும் என்று தெரிந்தால் அரசாங்கம் அதில் பங்கு எடுத்துக் கொள்ளாது. நல்ல முறையில் தொழில் நடக்கும் என்று தெரிந்தால்தான் பணம் இல்லாதவர்களுக்கு ஊக்கம் அளிக்க சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்பதாக இந்த சட்டசபையே வகுத்த கொள்கையில் ஒன்று இருக்கிறது என்று நம்புகிறேன். அதைப் பொறுத்து நியாயமான முறையில் நடத்தப்படும். அமைக்கப்படும் தொழில்களுக்கு சர்க்கார் உதவி அளிப்பது சரியாகும் என்று நம்புகிறேன்.

Sri N. R. THIAGARAJAN : இரண்டு கம்பெனிகள் ராமநாதபுரம் ஜில்லாவில் சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குப் போட்டி போடுவதாகவும் ஏதாவது ஒன்றுக்கு லைசென்சு வழங்க அரசாங்கம் யோசித்து வருவதாகவும் மந்திரி அவர்கள் சொன்னார்கள். மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலுக்காவில் வைகை அணைப்பகுதியில் 50 சதுர மைல் விஸ்தீர்ணத்திற்கு சிமிண்டு உற்பத்திக்கான மூலப் பொருள்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஒரு கம்பெனிக்கு லைசென்சும், மதுரை ஜில்லாவில் ஒரு கம்பெனியை ஆரம்பிப்பதற்கு மற்றொரு கம்பெனினிக்கு லைசென்சும் வழங்க அசாசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : யாராவது முயற்சி எடுத்துக்கொண்டால் மதுரையில் ஒரு சிமிண்டு பாக்டரியை ஆரம்பிப்பது பற்றியும் அரசாங்கம் முயற்சிசெய்யும். சர்க்கார் எல்லாவிதமான உதவியும் செய்வதற்கு தயாராய் இருக்கிறார்கள்.

Sri A. A. RASHEED : May I know how many new licences have been issued for opening cement factories in our State?

The Hon. Sri R. VENKATARAMAN : A separate question may be put.

Rice stock in the State.

* 144 Q.—**Sri K. SATTANATHA KARAYALAR** (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is sufficient stock of rice available in this State for distribution in 1957–58; and

(*b*) whether the Government have taken steps to check the rise in price of rice?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. With the stock now available and the stock that will become available in the future, the Government hope to cover the distribution in 1957–58.

(*b*) Yes, Sir.